உ

சிவமயம்



# தேவி வணக்கம்

1966

சக்தி அச்சகம்
தண்ணீரூற்று, முள்ளியவளை.

உ
சிவமயம்



# தேவி வணக்கம்

1966

சக்தி அச்சகம்
தண்ணீரூற்று, முள்ளியவளை.

# பதிப்புரை

குரும்பசிட்டியிலும் அதன் அயலூர்களிலும் உள்ள சைவ நன்மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக, 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைக்கும் தெய்வமாக இருப்பவர் குரும்பசிட்டியில் எழுந்தருளியிருக்கும் உமையம்மையே.

இந்த அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் திருவெம்பாவை உற்சவ காலங்களில் குரும்பசிட்டி சன்மார்க்க சபையாரும், பிறரும் சைவமக்களுக்குப் பயன்படக்கூடிய தோத்திரப் பாடல்களை அச்சிட்டு உதவிவந்தனர். அந்த வரிசையில் இவ்வருடம் (1966) அபிராமியந்தாதி என்னும் இந்நூலை நாம் மிகப் பணிவன்புடன் வெளியிடுகின்றோம்.

இவ்வந்தாதியை எழுதிய அபிராமிபட்டர் தேவி வழிபாட்டிற் சிறந்தவர். 1720 ஆம் ஆண்டளவில் சோழமண்டலத்திலுள்ள திருக்கடவூர் என்னும் ஊரில் வாழ்ந்தவர். தஞ்சாவூரை ஆண்ட சரபோசி மகாராசா ஒருமுறை இவரைச் சந்தித்தபோது வாய்தவறி அமாவாசையைப் பௌர்ணமி என்று கூறியமையால் சிறைத்தண்டனைக்குள்ளானார். தாம் கூறியதை மெய்ப்பிப்பதற்காக இந்த அபிராமியந்தாதியை அன்றிரவே தேவிமீது பாடினார். ''விழிக்கே அருளுண்டு'' என்ற பாட்டைப் பாடியபொழுது தேவி வெளிப்பட்டுக் காதுத் தோடுகளுள் ஒன்றைக் கழற்றி ஆகாயத்தில் எறிய அது பூரண சந்திரன்போலக் காட்சியளித்தது. பின்னர்த் தேவியின் கருணையைப் பாராட்டி மற்றக் கவிகளையும் பாடிமுடித்தார்.

இவ்வந்தாதியைப் பாராயணஞ் செய்வோர்க்குப் பரபத்தியையும், வரசித்தியையும் கொடுக்கும். இப்பாடல்கள் சந்தவின்பமும் பொருட்சுவையுமுடையவை.

பராசக்தியை வழிபடும் அடியவர்கள் இந்நூலால் பெரும் பயன் அடைவர் என்பது எம் நம்பிக்கை.

இங்ஙனம்,
**சக்தி அச்சகத்தார்**
(குரும்பசிட்டி)

தண்ணீரூற்று,
முள்ளியவளை,
19-12-66.

உ

சிவமயம்

# தேவி வணக்கம்

## விநாயகர் துதி

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்.

## தேவாரம்

முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

## புராணம்

செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
அறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
இறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

## அபிராமிபட்டர் அருளிச்செய்த

# அபிராமியந்தாதி

### காப்பு
### கட்டளைக் கலித்துறை

தாரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

### நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென புந்தியெந் நாளும் பொருந்துகவே.

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

துதியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாயசிந்து ரானன சுந்தரியே.

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகிடன் றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத தாண்மலர்த் தாளென் கருத்தனவே.

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
னென்று மருப்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரு [லா
மொளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
யளியே னறிவள விற்கள வான ததிசயமே.

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாந்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளேவந்து
யவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகி
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சுங்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
வொளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே.

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
வறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுதம்
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்ச மோவென் றனெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயிற் றுவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
யடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக் [கை
குள்ளேய னைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கு
மன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
யென்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே.

எத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்துங்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றுளிணைக்கென்
னுத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பதம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலாற்
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியு னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய் கொண்ட தல்ல
நன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுட் [வென்கை
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
யொன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே.

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க [ங்
வழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லா
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
யுழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே

வந்தே சரணம் புகும்படி யாருக்கு வானுலகந்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுர்முகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொற்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே.

திங்கட் பகையின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
வெங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடனுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே.

பொருளே பொருண்முடிக் கும்போகமே யரும் போகஞ்செய்யு
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்ற
னருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.

பவளக் கொடியிற் பழுத்த செவ்வாயும் பனிமுறுவற்
றவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையா
ளவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே.

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கண்
மாளுகைக் கம்பு லொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சு
காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு [சாற்
பூணுதற் கெண்ணிய வெண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தா
னண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொற்
றிரிபுர சுந்தரி சிந்துர மேனிய டீமைநெஞ்சிற்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் பச்சிலைக்கை
யெரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே.

தவளே யிவளெங்கள் சங்கர ஞர்மனை மங்கலமா
மவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினு
லிவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாந் [தே.
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றுனிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
மேழும் பருவரை யெட்டுமெட் டாம லிரவுபகற்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சி
லிடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே.

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றுயகி லாதி யுடையாள் சரண மரணமக்கே.

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே.

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
வையன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செயுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவங்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலுஞ்
செல் லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
யுன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவா
ரன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே.

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லா
முய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பாற்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டு சென்றுபொய்யு
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே.

அருணம் புயத்துமென் சித்தரம் புயத்து மமர்ந்திருக்குந்
தருணம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனம் புயமுங் கராம்புயமுஞ்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே.

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றி லேனொற்றை நீள்சிலையு
மஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே.

நாயே னையுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
றாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே.

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனதச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குன்சமய
மாறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே.

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கந்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கை யுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்றொடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் றோற்றமொரு
மாத்திரைப் போது மனதில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பு
மூரு முருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியிற்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமு
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே.

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாழ்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
விழவுற்று நின்றநெஞ் சேபிரங் கேலுனக் கென்குறையே.

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கி
னின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பி
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே.

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமு நாரணனு
மயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொற்
சயனம் பொருந்து தபனியக் காவினிற் றங்குவரே.

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே.

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப்பி ரானொரு கூற்றை [மெய்யிற்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்ச
ருயிரவி யுண்ணி யுயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமே
லப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையுந்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே.

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

கூட்டிய வரவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
யோட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணங்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
வாட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினால்
வணங்கே னொருவரை வாழ்த்துகிலே னெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனதுன தென்றிருப் பார்சிலர் யாவரோடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஞெளியாக நின்ற வெளிர்திரு மேனியை யுள்ளுதொறுங்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமல
மிரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியு
முரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.

உடையாளை யொல்குசெம் பட்டுடை யாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்கு நுண்ணூ
லிடையாளை யெங்கள் பெம்மா னிடையாளை யிங்கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாந்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே.

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு [ய்
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில் கண்டா
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
யழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமின் பத்தருக்குட்
டாமன் றிவனென்று தள்ளப் பெறுத்தரி யாதவுணர்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடம் பாகஞ் சிறந்தவளே.

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
வுறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல் வேண்டும் வருந்தியுமே.

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே.

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே.

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்ற
னிதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யானொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

நகையே யிஃதிந்த ஞானமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநா
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே.

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளக
மரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாந்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே.

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லையுனக்கே பரமெனக் குள்ளவெல்லா
மன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேத மிலாளை யெழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயி றன்னைத்தம்மா
லாமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதற்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே.

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினில் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே.

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாங்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத் திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையைப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையு
முழையைப் பொருகண்ணு நெஞ்சி லெப்போதுமுதிக்கின்றவே.

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழுவார்க்கொரு தீங்கிலையே.

அபிராமியந்தாதி முற்றிற்று.

## சக்தி ஓம்

| | | | | |
|---|---|---|---|---|
| சக்தி | ஓம், ஜய | சக்தி | ஓம் சிவ | |
| சக்தி | ஓம், தவ | சக்தி | ஓம், | |
| சக்தி | ஓம், நவ | சக்தி | ஓம், விஸ்வ | |
| சக்தி | ஓம், சுத்த | சக்தி | ஓம்! | (சக்தி) |
| மூல | குண்டலி | சக்தி | ஓம், ஜகன் | |
| மோக | ஞம்ருத | சக்தி | ஓம்; | |
| நீல | கண்டித | சக்தி | ஓம், - சத்ய | |
| நித்ய | தத்துவ | சக்தி | ஓம்! | (சக்தி) |
| வீர்ய, | தார்மிக | சக்தி | ஓம், - ஜய | |
| விஜய | சாத்விக | சக்தி | ஓம்; | |
| கார்ய | காரண | சக்தி | ஓம், - சிவ | |
| காந்த | சாந்தநற் | சக்தி | ஓம்! | (சக்தி) |
| துஷ்ட | நிக்ரக | சக்தி | ஓம், - சுயஞ் | |
| சோதி | மாதவ | சக்தி | ஓம்; | |
| சிஷ்ட | ரட்சக | சக்தி | ஓம், - ஜய | |
| சியாம | சுந்தர | சக்தி | ஓம்! | (சக்தி) |
| பொங்கு | மங்கள | சக்தி | ஓம், - பரி | |
| பூர்ண | ஞான்சிற் | சக்தி | ஓம்; | |
| தங்கும் | ஐந்தொழிற் | சக்தி | ஓம், - ஜீவ | |
| சர்வ | தாரக | சக்தி | ஓம்! | (சக்தி) |

**

## சுத்த சக்தி அருச்சனை

அன்பு மலரால் அன்னையைத் தொழுவோம்
இன்ப மெல்லாம் எளிதாய் வருமே!
அறிவாய் எங்கும் நிறைவாய் போற்றி
அருளால் உலகை அளித்தாய் போற்றி
அன்பே வடிவாய் அமர்ந்தாய் போற்றி

அன்னையே போற்றி அமுதே போற்றி
ஆருயிர்க் கோருயி ராணாய் போற்றி
ஆதி சக்தியே ஆணையே போற்றி
இகபர சுகங்களை ஈவாய் போற்றி
இதயக் கனலாய் எழுந்தாய் போற்றி

ஈறிலாக் கருணை வாரியே போற்றி
ஈசனே டொன்றும் இறைவியே போற்றி
உலகெலாம் கோயில்கொண் டிலகுவாய் போற்றி
உயிர்களை நாளும் ஊட்டுவாய் போற்றி
உண்மை விளக்குங் கண்மணி போற்றி

உள்ளத் தின்ப வெள்ளமே போற்றி
ஊமையும் பேச உன்னுவாய் போற்றி
ஊழையும் வெல்ல உதவுவாய் போற்றி
எண்ணு மெண்ணத் தினிப்பாய் போற்றி
எண்ணிலாப் புவிவளர் விண்ணே போற்றி

எங்குந் திருவரு ளிறைப்பாய் போற்றி
என்னை யாளும் இறைவியே போற்றி
ஏகம் அநேகமாய் எழுந்தாய் போற்றி
ஏழைமை தவிர்க்கும் இலக்குமி போற்றி
ஐந்தொழில் புரியும் அருளே போற்றி

ஐக்யானு பூதி அருளுவாய் போற்றி
ஒன்றிய மனந்தொறு நின்றாய் போற்றி
ஒவ்வோ ருயிர்க்கும் உள்ளமே போற்றி
ஒருகுல முலகென் றுணர்த்துவாய் போற்றி
ஒளியே அகண்ட வெளியே போற்றி

ஓங்கா ரத்தின் உட்பொருள் போற்றி
ஓதா துள்வளர் வேதமே போற்றி
ஓங்குமா னந்தத் தீங்கனி போற்றி
ஓம்பரா சக்தி ஓம்மஹா சக்தி
ஔவியப் பேய்களை அடக்குவாய் போற்றி

ஔடத மாகும் அன்பே போற்றி
அஃகா வளந்தரும் ஆற்றலே போற்றி
கல்வி யருளும் கலைமகள் போற்றி
காளியே சக்திக் கனலே போற்றி
கிழக்கே பகலாய்க் கிளரொளி போற்றி

கீழ்மை யகற்றுங் கீர்த்தியே போற்றி
குருவே யனந்த குணமே போற்றி
கூன்பிறை சூடியின் குலசக்தி போற்றி
கேண்மைக் கேற்ற பான்மையே போற்றி
கைத்தொழில் வளர்க்குங் கையே போற்றி

கொழுந்துவிட் டோங்குங் குண்டலி போற்றி
கௌரியே போற்றி கன்னியே போற்றி
சரணம் சரணம் சக்தியே போற்றி
சாந்தப் பொலிவருள் சங்கரி போற்றி
சிந்தனைக் கினிய சிற்பரை போற்றி

சீலந் தந்தருள் சிவையே போற்றி
சுத்த சக்தி ஓம் நித்திய சக்தியே
சூரிய னுள்ளொளிர் சுடரே போற்றி
செந்தணல் போன்ற சுந்தரி போற்றி
சேயா யெனைவளர் தாயே போற்றி

சைதன்ய சோதி தருவாய் போற்றி
சொல்லற் கரிய சுகமே போற்றி
சோதி யளிக்கும் சொல்லே போற்றி
சௌபாக் கியமருள் சாம்பவி போற்றி
அஞ்சா நெஞ்சுரம் அளிப்பாய் போற்றி

ஆண்மையும் வீறும் அருளுவாய் போற்றி
ஞான மகேஸ்வரி நாரணி போற்றி
ஆதார கமலத் தமர்வாய் போற்றி
இடாகினீ ராகினீ லாகினீ போற்றி
காகினீ சாகினீ ஹாகினீ போற்றி

திங்களிற் புன்னகை செய்வாய் போற்றி
மங்கள சக்தி மாதவி போற்றி
துணிவுளார்க் குதவும் துணையே போற்றி
பணிசெய்வார்க் குதவும் பயனே போற்றி
தகரா காச சக்தியே போற்றி

தாரக மான சாந்தமே போற்றி
திறமைக ளீயும் தீயே போற்றி
தீனரைக் காக்கும் தெய்வமே போற்றி
துஷ்டரை யழிக்கும் துர்க்கையே போற்றி
தூயரைப் போற்றும் நாயகி போற்றி

தெவிட்டா துள்வளர் தேனே போற்றி
தேவியே வாழ்விற் காவியே போற்றி
தையலாய் உலகந் தருவாய் போற்றி
தயவே வடிவாம் தாயே போற்றி
நல்லார் விரும்பு நட்பே போற்றி

நாடி வீணையிற் பாடுவாய் போற்றி
நித்திய மான நிமலையே போற்றி
நீலியே போற்றி பாலையே போற்றி
பரமனோ டொன்றிய பார்வதி போற்றி
பார்வையுள் ளாக்கினோர் பார்ப்பே போற்றி

பிரம சக்தியாம பிராமியே போற்றி
பீடுறு மன்பரை நாடுவாய் போற்றி
புண்ணியர் போற்றும் விண்ணே போற்றி
பூரணர் வணங்கும் நாரணி போற்றி
பைரவி போற்றி பவானி போற்றி

மங்களம் பொழியும் மனோன்மணி போற்றி
மாசிலார் வணங்கும் மலரடி போற்றி
மின்னிப் பறக்கும் புன்னகை போற்றி
மீனைப் போன்ற விழியே போற்றி
முத்தர் விரும்பும் முதல்வீ போற்றி

மூலா தாரச் சுவாலையே போற்றி
விஞ்ஞா னத்தின் விளக்கமே போற்றி
வீறு மிகத்தரும் வீரியே போற்றி
வெற்றி யருளும் வித்தகி போற்றி
வையகங் கோயிலாய் வளர்வாய் போற்றி

அளவிலா விளையாட் டாற்றுவாய் போற்றி
அறநெறி வாழ்வை யளிப்பாய் போற்றி
உன்னரு ளோங்கி உயிர்க்குலம் வாழ்க
ஆன்ம நேயம் அவனியிற் பரவுக
நன்மை யோங்குக நாடெலாம் வாழ்க!

இன்ப வளங்கள் எங்கும் நிறைக!
புதுயுகம் வருக பூரணம் பொழிக!
அமரவாழ் வருளாய் அன்னையே போற்றி!

சுத்தம் அருளாய் சக்திஓம் சக்தி
முத்தி யருளாய் சக்திஓம் சக்தி
சமத்துவ மருளாய் சக்திஓம் சக்தி
சித்தி யருளாய் சக்திஓம் சக்தி
சக்தி ஓம்சக்தி சுத்த சக்தி ஓம்!

★★

# காமாட்சியம்மை விருத்தம்

## ஆசிரிய விருத்தம்

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி சோதியாய் நின்ற வுமையே, சுக்கிரவாரத்திலுனை கண்டுதரிசித்தவர்கள் துன்பத்தை நீக்கிவிடுவாய், சிந்தைதனி லுன்பாதந் தன்னையே தொழுமவர்கள் துயரத்தை மாற்றிவிடுவாய், ஜெகமெலா முன்மாய்கை புகழவென்னலாமோ சிறியனல் முடிந்திடாது, சொந்தவுன் மைந்தனு யெந்தனை யிரட்சிக்கச் சிறிய கடனுன்னதம்மா, சிவசிவ மகேஸ்வரி பரமனிட யீஸ்வரி சிரோன்மணி மனோன்மணியு நீ, அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரியனுத ரட்சகியும் நீயே, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது பாடகந் தண்டை கொலுசும், பச்சை வைடூரிய மிச்சையா யிழைத்திட்ட பாதச் சிலம்பினொளியும், முத்துமூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும் மோகன மாலையழகும், முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினல் முடிந்திட்ட தாலியழகும், சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலுஞ் செங்கையிற் பொன்கங்கணம், செகமெலாம் விலைபெற்ற முகமெலா மொளிவுற்ற சிறுகாது கொப்பினழகும், அத்திவரதன் தங்கை சத்திசிவ ரூபத்தை யடியனுற் சொல்லதிறமோ, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

கெதியாகவுந்தனைக் கொண்டாடி நினது முன் குறைதனைச் சொல்லிநின்றும், கொடுமையா யென்மீதில் வறுமையை வைத்து நீ குழப்பமா யிருப்பதேனே, சதிகாரியென்று நானறியாம லுந்தனைச் சதமாகநம்பினேனே, சற்றுகிலும் மனது வைத்தென்னை ரட்சிக்க சாதகமுனக் கில்லையோ, மதிபோல வொளியுற்ற புகழ்நெடுங் கரமுடைய மதகசனை யீன்றதாயே, மாயனிட தங்கையே பரமனதுமங்கையே மயானத்தில் நின்றவுமையே, அதிகாரி யென்றுநானுசையாய் நம்பினே னன்புவைத்தென்னை யாள்வாய், அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

பூமியிற் பிள்ளையாய்ப் பிறந்தும்வளர்ந்து நான் பேரான ஸ்தலமு மறியேன், பெரியோர்கள் தரிசன மொருநாளும் கண்டு நான் போற்றிக் கொண்டாடி யறியேன், வாமியென் னுன்னைச் சிவகாமியென்றே சொல்லி வாயினாற் பாடியறியேன், மாதாபிதாவினது பாதத்தை நானுமே வணங்கியொரு நாளு மறியேன், சாமியென்றே யெண்ணி சதுருடன் கைகூப்பி சரணங்கள் செய்து மறியேன், சற்குருவின் பாதார விந்தங் களைக்கண்டு சாஷ்டாங்க தெண்டனறியேன், ஆமிந்த பூமியி லடியனைப்போல் மூடன் ஆச்சிநீ கண்டதுண்டோ, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

பெற்றதா யேன்றுன்னை மெத்தவும் நம்பினேன் பிரியமா யிருந்தனம்மா, பிந்தலாட்டக்காரி யென்றுநா னறியாது உன் புருஷனை மறந்தனம்மா, பத்தனாயிருந்துமுன் சித்தமு மிரங் காமல் பராமுகம் பார்த்திருந்தால், பாலன்யானெப்படி விசனமில்லாமலே பாங்குட னிருப்பதம்மா, இத்தனை மோசங்க ளாகாது ஆகாது இதுதர்மமல்லவம்மா, எந்தனை ரட்சிக்க சிந்தனைக ளில்லையோ யிது நீதியல்லவம்மா, அத்திமுகனுமைசயா லிப்புத்திரனை மறந்தையோ அதையெனக்கருள் புரிகுவாய், அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

மாயவன் றங்கைநீ மரகதவல்லிநீ மணி மந்த்ர காரி நீயே, மாயாசோரூபிநீ மகேஸ்வரியு மானநீ மலையரையன் மகளானநீ, தாயேமீனாட்சிநீ சற்குணவல்லிநீ தயாநிதி விசாலாட்சிநீ, தாரணியில் பெயர்பெற்ற பெரியநாயகியும்நீ சரவணனை பீன்றவளும்நீ, பேய்களுடனாடுநீ அத்தனிடபாக மதில் பேர்பெற வளர்ந்தவளும்நீ, பிரணவசொரூபிநீ பிரசன்னவல்லிநீ பிரியவுண்ணாமுலையுநீ. ஆயிமகமாயிநீ ஆனந்தவல்லிநீ அகிலாண்டவல்லி நீயே, அழகான திருக் குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

பொல்லாத பிள்ளையா யிருந்தாலும் பெற்ற தாய் புத்தி களைச் சொல்லவில்லையோ, பேய்பிள்ளையானாலும் தான்பெற்ற பிள்ளையைப் பிரியமாய் வளர்க்கவில்லையோ, கல்லாகிலும் மூச்சு நில்லாமல் வாய்விட்டுக் கதறி நானழுத குரலில், கடுகதனி லெட்டிலொரு கூறுவதிலாகிலுன் காதினில் நுழைந்ததில்லையோ, இல்லாத வன்மங்க ளென்மீதி லேனம்மா யினிவிடுவ தில்லை சும்மா, இருவரும் மடிபிடித்துத் தெருதனில் வீழ்வதுமிதுதரும மல்லவம்மா, எல்லாரு முன்னையே சொல்லியே யேசுவாரது நீதியல்லவம்மா, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

முன்னையோர் சென்மாந்திர மென்னென்ன பாவங்கள் மூடனுன் செய்தனம்மா, மெய்யென்று பொய் சொல்லி கைதனிற் பொருள்தட்டி மோசங்கள் பண்ணினேனே, என்னமோ தெரியாது இட்சணந்தன்னிலேயிக்கட்டு வந்ததம்மா ஏழைநான் செய்தபிழை தாய்பொறுத் தருள்தந்து என்கவலை தீருமம்மா, சின்னங்களாகுது ஜெயமில்லையோதாயே சிறுநாண மாகுதம்மா, சிந்தனைகளென்மீதில் வைத்துநற் பாக்கியமருள் சிவசக்தி காமாட்சி நீ, அன்ன வாகனமேறி யானந்த மாகவுன் னடியன்முன் வந்துநிற்பாய், அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

எந்தனைப் போலவே செனனம தெடுத்தோர்க ளின்பமாய் வாழ்ந்திருக்க, யான் செய்தபாவமோ வித்தனை வறுமையிலுன் னடியேன் தவிப்பதம்மா, உன்னையே துணையென் றுறுதியாய் நம்பினே னுன்பாதஞ் சாட்சியாக, உன்னையன்றி வேறுதுணை யினியாரையுங் காணேன் உலகதனிலெந்தனுக்கு, பின்னையொன் றெண்ணி நீ சொல்லாம லென்வறுமை போக்கடித் தென்னை ரட்சி, பூலோக மெச்சவே பாலன் மார்க்கண்டன்போல் பிரிய மாய்க் காத்திடம்மா, அன்னையே யின்னமுன் னடியேனைரட்சிக்க அட்டிசெய் யாதேயம்மா, அழகான திருக்குரும்பை நகரில் புக ழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

பாரதனி லுள்ளளவும் பாக்கியத்தோடென்னைப் பாங்குட னிரட்சிக்கவும், பத்தியாயுன்பாதம் நித்தந் தரிசித்த பாலருக் கருள்புரியவும், சீர்பெற்ற தேகத்தில் சிறுபிணிகள் வாராமல் செங்கலிய னணுகாமலும், சேயனிட பாக்கியஞ் செல்வங் களைத் தந்து ஜெயம்பெற்று வாழ்ந்து வரவும், பேர்பெற்ற காலனைப் பின்றொடர வொட்டாமற் பிரியமாய்க் காத்திடம்மா, பிரியமாயுன்மீதில் சிறியனுன் சொன்னகவி பிழைகளைப் பொறுத்துரட்சி, ஆறதனில் மணல்குவித் தரிய பூசை செய்த வென் னம்மையேகாம்பரி நீயே, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

எத்தனை செனனம தெடுத்தேனே தெரியாது விப்பூமி தன்னிலம்மா, இனியாகிலும் கிருபை வைத்தென்னைரட்சியு மினிசெனன மெடுத்திடாமல், முத்திதரவேணுமென் றுன்னையே தொழுதுநான் முக்காலும் நம்பினேனே, முன்பின்னுந் தோணுத மனிதரைப் போல நீ முழித்திருக்காதேயம்மா, வெற்றிபெற வுன்மீதில் பக்தியாய் நான் சொன்ன விருத் தங்கள் பதினொன்றையும், விருப்பமாய்க் கேட்டு நீ யளித்திடுஞ் செல்வத்தை விமலனுரேசப்போரூர், அத்தனிட பாகமதை விட்டுவந்தே யென் னருங் குறையைத் தீருமம்மா, அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மை பராசக்தி உமையே.

## மீனாட்சியம்மன்
# உயிர்வருக்கமாலை

அஞ்செழுத்தான நீ ஓரெழுத்துருவமாய் அரனோடிருந்த வளும்நீ, ஆறுசாஸ்திரம் நாலுவேதக் கலைக்கியானம் ஐம்பத் தோரட்சரமுநீ, கஞ்சமலர்மாதுநீ வெஞ்சமரில் வாணனைக் கண்டதுண்டஞ் செய்தவளு நீ, காரணிகலையேறு வீரமாகாளிநீ கைலாச வடபாலிநீ, பஞ்சகோணத்திருந்தறம் வளர்ப்பவளுநீ பாவங்கள் தீர்ப்பவளுநீ, பாவாணர் பிணிதீர உதவிசெய் மகமாயி பகவதி கௌமாரிநீ, வஞ்சகத்திருடர்களைத் துஞ்சிட வறுத்த திருமாலின் சகோதரியும்நீ, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந் திடும் அம்மையே.

ஆதியாய் அந்தமாய்ச் சோதியாய் வெளியுமாய் ஆருறு தத்துவமுமாய், அகிலமாய் அண்டமாய்ச் சப்த சாகரமுமாய் அணுவாகி மகமேருவாய், நீதியாய் நெறியுமாய் நிலையுமாய்க் கலையுமாய் நினைவுமாய்க் கனவுமாகி, நேசமாய்ப் பாசமாய் உணவற்ற வடிமைக்கு நெஞ்சுக்குளொரு தெய்வமாய், பேதி யாதேயிருந்தடிமை பிணிதீரெனைப்பெற்றவளு நீயாகுமே, பிஞ்சுமதி மஞ்சளணி சடைச்சியே சிவனோடு பேசிநடன மாடுகின்ற, வாதியே முக்கண்ணி யபிராமி சிவகாமி வல்லிதிரி சூலிநீலி, வருமடியர் குறை தீர வரமருளும் அழகான திருக் குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே

இரவலர்க்கீயாத வறிவிலா மூடரை யிரங்காத கல்நெஞ் சரை, எவ்வுயிருந் தன்னைப்போல் நினையாத கசடரை ஈனங்கள் செய்பவர்களை, பரகதியை நினையாத துற்சனர்கள் முன்சென்று பாடாமலுன்புகழையே, பத்தியாய் நித்தமும் துதிக்கவே யருள் தரும் பரமகல்யாணிநீயே, கரமுருகசுந்தரி ராவணன் முடி கொய்தகண்ணன் சகோதரியும்நீ கங்காளி மகிடசங்காரி ஓங்காரிநீ காரணி பரிபூரணி, வரமருள் புரந்தரி நிரந்தரி வல்லியாய் வடிவாக நின்றவுமையே, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந் திடும் அம்மையே.

சுவதுவிலக்காமல் நோய்பிணிகள் வாராமலெனை மறலி யணுகாமலே, யிருகமல பாதாரவிந்தமே தந்தெனை யெப்போதும் நீயாளுவாய், தாயீன்றபிள்ளை தான் நூறுபிழை செய்யினுப் தாயலாதார்பொறுப்பார், தஞ்சமென்றஞ்சலென்றுலெனக் காரொருவர் தாரணியில் வேறுமுண்டோ, ஓயாத பொருள்தேடி வைக்கிலோர் பிள்ளைநானுண்டுகலை முற்று மகளே, உறவாடி வாழலாந் தப்பினுல் மூவரும் உடனே கெடுக்க நினைவார், வாயாரவெண்ணெயை உண்டாமல் தங்கையே வந்தடிமைகார்மங்கையே, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

உற்றவர்கள் பெற்றவர்கள் உறவென்ன சுற்றமும் ஒருகோடிபேரிருந்தும், ஒருகோடிதனமல்ல எழுகோடி பொன்னிருந் துதவுமோ மறலிவருநாள் எத்தேசகாலமும் நின்பாத தெரிசனை யிடைவிடாதே நினைந்தால், ஏமனோ பிணிகளோ கிரகதோஷங்களோ எண்டிசை பறந்தோடுமே, பித்தனோடு அண்டங்கள் கிடுகிடென நடனமிடு பேச்சியாய் நின்றவடிவே, பேதாதி பேதமாய் வல்லுயிர் படைத்திட்ட பிர்ம்மனுக் கதிகாரியே, வற்றாதசெல்வமுங் கல்வியுஞ் ஞானமும் வந்திடவெனக்கருளுவாய், வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

ஊனுடம்புக்குளே வாசலொன்பதுவிட்டு உபாயதந்திரமாகவே, உள்ளைந்துபூதமும் ஆறுஆதாரமும் ஓங்கார ஸ்ரீபீடமும், பானுவுந்திங்களுஞ் சுழிவட்ட முனைகளும் பங்கயத்தயனுமாலும், பரமனுஞ்சக்தியும் வெளியொளியுமாகப் படைத்தவளுநீயாகுமே, தேனூறுகனிவாய் திறந்தஞ்செழுத்தைத் தெளிவாக நீயெனக்குச், சித்தம்வைத் தென்பேரிற் பேரின்ப வாழ்க்கையைத் தெளிந்திட வெனக்கருளுவாய், வானுலகு திங்களணி செஞ்சடிலனோடு நடமாடிவரும் ரூபமயிலே, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

எட்டுகிரி மீதினில் ஏழுலகம்வைத்து மகம் மேருவை நிறுத்தியதும், இயலானபூமிக்கு ளாடு சாகரமுமா மிலக்கற்றபல்லுயிர்களும், தட்டுவரை வைத்ததும் ஜாதிவிதமானதும் சமயமாறுனவிதமும், தரணியளந்தமால் நான்முகன் அறுமுகன் தந்திமுகனுனவிதமும், மட்டுலவு லட்சுமி பார்வதி சரஸ்வதி மாகாளியானவிதமும், வாழ்த்தவேமுடியாது நின்மகிமையானதே வளர்சத்தி சிவமிரண்டே, வட்டத்தில் அறுகோணமூர்த்தியே யிமயகிரிமடந்தை யெனையாளவந்த, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

ஏற்பது இகழ்ச்சியாம் இல்லறம் நல்லதாம் ஈவதே பெருமை யெனவே, யிரவலர்க்கன்னசொர்ணங் கொடுக்கவே யீஸ்வரி யருள்புரிகுவாய், காப்பதே விரதமாம் உன்பாத தெரிசனை கண்டுதொழ அறியாதவன், கல்நெஞ்சன் மூஷிகன் சிவபூசை யறியாத கஷ்டதுஷ்டக்கபடனன், நாற்பத்துமுக்கோண சக்தியைப்பூசிக்க நாவினுல் துதியாதவன், நானுனக்கடிமையால் நீயெனை யாட்கொண்ட நளினத்தை யென்சொல்குவேன், வார்பாக வெனைமறலி யணுகாமல் ரக்ஷித்துன் மலரடி பதஞ் சேரவே, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

ஐயாறுமூவேழு அக்ஷரத்துள்ளாகி ஆதியாய்ச் சுழிமுனையுமாய், அனவரத கண்டமாய்ப் பிண்டமாய் எண்ணுன்கறம் வளர்த்திடு தாயுமாய், கையைந்து நாலுமாய் மும்மலச்செவி கொண்டு கரிமுகவனெரு கொம்பனை, காங்கயன் பன்னிருகை வேலனைப்பெற்றிடும் கன்னிபகவதி குமரிநீ, பையரவணிந்தவன் சடையிலும் கையிலுரி பாகத்தமர்ந்தவளுநீ, பதினலு லோகமும் நிறைந்தபரிபூரணி பாதபங்கயநாலுமாம், வையகந் தன்னிலே வருமிடியைதீர்த்து மருவாழ் வளித்திடுமன்னை நீ' வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

ஒன்ருகி ரெண்டாகி ஒன்றிரண் டொன்ருகிவுண்மையுறு ஞானவொளியாய், உணர்வாலையறிவாகி முத்திக்குவித்தாகி உள்ளுக்குள் நீயுமாகி, நன்ருக நீயெனக் கன்னையாய் குருவுமாய் நானுனக்கடிமையானேன், நரகத்தில் வீழாமல் உன்கருணை மூழ்கியே நமனைவெல்லக் கருணைசெய், கன்ருவைத்தேடிவரும் வேளைகண்டேயதன் நற்ருயிரங்குவதுபோல், கால்தூக்கி நடனமிடும் தியாகரிடபாகத்தில் தங்கினமால் தங்கையே, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

ஓதவறியேனுனைப் பாடவறியேன் ஒருவர் உத்தரம் பேசவறியேன், உரைக்கின்ற முந்நூல்கள் நூற்பய னறிகிலேன் ஓம்நமசிவாய மறியேன், நீதமறியேன் சிவபூசையறியேன் குருவி னிணையடி வணங்கவறியேன், நெஞ்சினிற் றியானிக்க மந்திரமறியேன் பலநேம நிஷ்டைகளு மறியேன். வேதமறியேனுறு சாஸ்திரமறியேன் உனைவேண்ட அறியாதவனை நீ, மெய்யாகவே தடுத்தெனை யடிமை கொண்டுனது விதிகமலபாதமருள்வாய், மாதமே பத்தும் சுமந்து பெற்றுயென்னை வளர்ப்பது உனக்கருமையோ, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழகென அறியாத நெஞ்சர் முன்போய், அருமையும் பெருமையும் சொன்னதாலென்கவலை ஆறுவது எளிதாகுமோ, எவ்வுருவையும் படைத்தறம் வளர்ப் பவளுக் கெளியனொரு விண்ணப்பமே, யேழையினி பாரின்மேல் பிறவாமல் ஒருமந்திரம் ஈஸ்வரி யருள்புரிகுவாய், நவ்வுமவ்வுஞ் சவ்வுவவ்வு மவ்வுந்தினம் நாவிலே நிற்க அருள்வாய், நாலைந்து கிரகமும் ஒத்திருக்கும்படி நடத்தியே யென்னையாளுவாய், வவ் விலே சுழிவட்ட முனையிலே ஆதாரவஸ்துவாய் நின்றபொருள் நீ, வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

அலைனொடு நடனமிடு பொற்பதத்திடு சதங்கைக்கு விரல் காலாழியும், அன்னநடை யொத்தவிரு பாதபாடகமுடன் அணி பெருந் தண்டைகொலுசும், திக்குவொளிவீசு செங்கைக் கடக மோதிரஞ் செம்பொன் ரவிக்கையழகும், செங்கதிர் வளைந் துஞ்சரப்பளிபதக்கமும் சேறுமங்கல ஞாணுடன் பக்கமதி விருகுழை தொடுத்த மூக்குத்தியும் பவளவாய் முகத்தினழகும், பங்கயமுகத்தினிடை செந்தூரபிறைநுதற் பார்வையுங் கூந்தல் முடிமேல், வைக்குமிறை திருவெண்ணீறணி யெழுந்தருளீசன் மனதுக்குள் நீயிருப்பாய், வருமடியர் குறைதீர வரமருளும் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே

முற்றிற்று.

ஓ

## ஆசிரிய விருத்தம்

பெற்றதாய் தந்தையும் பிறவியு மிருந்தென்ன பிள்ளை பெண்சாதி யென்றும், பிரியமாய் மனிதர்க்கு ஞறவா யிருந் தென்ன பிராணனுக் குதவியுண்டோ, நித்தனு ரிடபாக முத் திதர வேயொளிரு நீலி யம்பிகை திரிசூலி, நீங்கவொட்டா மலே தேங்குமுள மலநீக்கி நிலையான பதவியருள்வாய், மெத் தவே நொந்துனது சிற்றடியை நம்பினேன் மிகமவுன மாயி ராதே, மேதினியி லுன்னைவிட வேறுமொரு தெய்வங்கள் மெய்யான தெய்வ முண்டோ, தத்திமித் தாளமொடு வரும மலர் தியாகமகிழ் அழகான திருக்குரும்பை நகரில் புகழாக வாழ்ந்திடும் அம்மையே.

## விரதகாலத்தில் ஓதற்பாலனவாகிய
# தோத்திரப் பாக்கள்

### விநாயகர்

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா
யிருப்பானை யுரக வேந்தன்
ருங்குநெடு நிலத்தானை முகத்தானை
வதைத்தானைச் சயில மானைப்
பாங்குவைத்து மழுத்தானை பரித்தான்றந்
தளித்தானைப் பசும்பொற்றோட்டுப்
பூங்கமல பதத்தானைப் பொருவிலைந்து
கரத்தானைப் போற்றல் செய்வாம்.

சொற்பகர்நா வினுக்கடங்கா வளங்குலவு
தில்லைமன்று துலங்கு கோயிற்
பொற்பகலாக் குடதிசைக்கோ புரத்தமார்
கணத்தலைவர் போற்ற மேவி
யற்பகனுண் மலரிறைத்துத் தொழுமடியார்
வேட்டவர மளித்த லாலே
கற்பகநா மம்பெறுமே ரம்பனையோர்
கொம்பனையுட் கருதி வாழ்வாம்.

### நடராஜர்

சீர்தந்த கமலமலர்த் திசைமுகனுந்
திருமாலுந் தேவர் கோவுங்
கூர்தந்த நகப்புலிக்காற் றவமுனியும்
பதஞ்சலியுங் குழைந்து போற்ற
வார்தந்த கலசமுலை மலைவனிதை
விழிகளிப்ப மன்று ளாடுங்
கார்தந்த மணிமிடற்றுக் கடவுடிரு
வடியிணைகள் கருத்துள் வைப்பாம்.

### சிவகாமியம்மை

கடிகமழ்கட் கமலமலர்க் கட்டிகிரிக்
கரனொருகூ கரம தாகிப்
படியிடந்து மறிவரிய பதப்பவள
மலைமருங்கிற் படரும் பச்சைக்
கொடிகொடிய பவக்கடலிற் குளித்தழுந்தா
தின்பமுத்தி கூடும் வண்ணம்
அடியவருக் கருள்புரியுஞ் சிவகாமி
யம்மைபதத் தன்பு கூர்வாம்.

## சுப்பிரமணியர்

சூராட்டுப் பயில்சயிலத் துணைமுலைத்திண்
டகுவியர்மை தோயும் வாட்க
ணீராட்டுப் பெறமறநீ டவுணருடற்
புலவலகை நிறையத் தேக்கிப்
பாராட்டுத் தரவடிவேற் படைபணித்த
கரனரன்பார்ப் பதிக்குச் செல்வச்
சீராட்டுப் பிள்ளையெனு முருகன்முரு
கவிழ்மலர்த்தாள் சென்னி சேர்ப்பாம்.

இரங்குன்றன் றஞ்சநமக் கென்றுமக
வான்முதலோ ரிரப்ப நீண்ட
கரங்குன்றம் படைத்தனைய கரிமுகத்தோ
னரிமுகத்தோன் கதங்கொள் சூரன்
வரங்குன்ற மயிலுகைத்தங் கயிலெடுத்த
மலர்க்கரத்தோன் மஞ்சு துஞ்சும்
பரங்குன்றத் திருந்தசெவ்வே ளடிக்கடிச்செம்
பதுமமலர் பணிதல் செய்வாம்.

ஈரலைவா யசங்கவரப் பிணங்கிடக்கும்
களத்தமர்நீத் தெய்தி நொய்தின்
வாரலைவா யுறுமொருமா வரையோரொன்
ஞேரிரண்டா வகிர்ந்த வேலோன்
வேரலைவா யழிக்குமென்றேட் கவின்படைத்த
வள்ளிசுர வேழத் தோடு
சீரலைவாய் வருமடிக ளடியரடிப்
பொடிமுடியிற் சேர்த்தல் செய்வாம்.

உருத்தணியா வருமசுர ருடறுணிக்கு
நெட்டிலைவே லுரவோய் துன்பக்
கருத்தணியாப் பெருவெயிலுட் டிழைத்திளைத்த
களையகலக் கருணைக் கண்டந்
திருத்தணியார் கழனிழற்கீ ழென்றுவழி
படுமடியா ரிதயத் துள்ளுந்
திருத்தணியாம் பதியகத்தும் வாழ்குமர
குருபரன்றாள் சிரமேற் கொள்வாம்

பொருவினறு மலர்பொதுளுந் தண்டலைசூழ்
கதிரைநகர்ப் புனிதன் பாத
முருகியுளத் தழுத்திவினை நீறழுத்து
மாறெழுத்து முணர்ந்து நாவின்
முருகசர வணபவசண் முககுகவென்
றனுதினமு மோழிவோர் தங்கண்
மருமருவு கமலமல ரடிமுடியின்
மீதுவைத்து வணங்கல் செய்வாம்.

## திருநந்திதேவர்

செய்யதழற் புரிசடையுந் திருநுதலிற்
றனிவிழியுந் திண்டோ ணன்குங்
கையதனிற் சுரிகைமழுப் பிரம்புகவை
யடிச்சிறுமான் கன்றுந் தாங்கி
வெயமுத லனைத்துலகுந் தொழுங்கயிலை
மலைகாக்க மதியஞ்சூடு
மையனருள் பெற்றநந்தி யடிக்கமல
முடிக்கமல மாக வைப்பாம்.

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மாணி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகி
லூரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுதாம்
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

ஆடக சிதம்பர அணங்குமை அணங்கிலா
நாடகன் அநந்தசுகம் நன்குபுனை பங்கினுள்
ஏடக மணம்பொருவ எங்கணும் நிறைந்துளாள்
பாடக மிலங்குசிறு பங்கய மிறைஞ்சுவாம்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே!

திருச்சிற்றம்பலம்.